

மலேசியா, கோலாலம்பூரில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, தி.மு.க. அயலக அணி சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. சிறப்புரையாற்றினார். உடன் தி.மு.க. அயலக அணியின் செயலாளர் எம்.எம்.அப்துல்லா, மலேசியா கட்சித் தலைவர் டத்தோ முகமது இஸ்மாயில் இமான், நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளரும், மலேசியா தி.மு.க. அயலக அணி அமைப்பாளருமான முஹம்மது ஃபிர்தோஷ் கான் மற்றும் 15 மலேசியத் தமிழ்ச் சங்கங்கள், மலேசிய தமிழ் நிபுணர் மன்றம் ஆகியவை கலந்து கொண்டு சிறப்பித்தன.

### பொதுப்பணித் துறை சார்பில்

# 165 நபர்களுக்கு பணிநியமன ஆணைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, ஆக. 20-

பொதுப்பணித் துறை சார்பில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக தெரிவு செய்யப்பட்ட 165 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.8.2025) தலைமைச் செயலகத்தில், பொதுப்பணித்துறை சார்பில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக உதவிப் பொறியாளர் (சிவில்) மற்றும் (மின்) ஆகிய பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட 165 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

மாநிலத்தில் உள்ள பல்வேறு அரசுத் துறைகளின் கட்டட உட்கட்டமைப்பை மேம்படுத்துவதிலும், பராமரிப்பதிலும் பொதுப்பணித் துறை முக்கியப் பங்கு வகிக்கிறது. பொறியியல் கட்டுமான நிபுணத்துவத்துடன் மாநில உள்கட்டமைப்பை மேம்படுத்துவதன் மூலம் இத்துறை 165 வருடங்களுக்கு மேலாக மக்களுக்குச் சேவைகளைத் தொடர்ந்து வழங்கி வருகிறது. மாநிலம் முழுவதும் அரசுக் கட்டடங்களைக் கட்டுதல் மற்றும் பராமரித்தல் போன்ற பொறியியல் சேவைகளை வழங்குவதோடு, கட்டடக் கலை. திட்டம் மற்றும் வடிவமைப்பு, கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, மின் மற்றும் தரக்கட்டுப்பாடு போன்ற பிரிவுகளின் ஒருங்கிணைந்த செயல்பாடுகளால் புதிய கட்டுமான முறைகளை மேற்கொண்டு அரசுத் துறைகளுக்கான நீடித்த மூலதன சொத்துக்களை உருவாக்குதல், பல்வேறு அரசுத் துறைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் வரவு செலவு பொது திட்ட வரம்புகளுக்குள் கட்டடங்களைக் கட்டி, அவற்றின் திடத்தன்மை, பாதுகாப்பு மற்றும் நிலைத்தன்மையை உறுதி செய்தல், பாரம்பரியக் கட்டடங்கள், நினைவுச் சின்னங்கள் மற்றும் நினைவகங்களைப் பாதுகாத்தல், புதுப்பித்தல் மற்றும் மறுசீரமைத்தல், நவீனத் தொழில்நுட்பத்துடன் புதுமையான கட்டுமான நடைமுறைகளை செயல்படுத்துதல் போன்ற பல்வேறு பணிகளை பொதுப்பணித்துறை வாயிலாக அரசு மேற்கொண்டு வருகிறது.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த பொதுப்பணித்துறையின் பணிகள் தொய்வின்றி நடைபெற அவ்வப்போது ஏற்படும் காலிப் பணியிடங்கள் உடனுக்குடன் நிரப்பப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், பொதுப்பணித் துறை சார்பில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக உதவிப் பொறியாளர் (சிவில்) பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட 98 நபர்களுக்கும், உதவிப் பொறியாளர் (மின்) பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட 67 நபர்களுக்கும், என மொத்தம் 165 நபர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இவ்வரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுநாள் வரை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வாயிலாக உதவிப் பொறியாளர் (சிவில்) 406 நபர்கள், உதவிப் பொறியாளர் (மின்) 103 நபர்கள், முதுநிலை உதவி கொதிகலன்கள் இயக்குநர் 4 நபர்கள், இளநிலை கட்டடக் கலைஞர் 4 நபர்கள், இளநிலை வரைதொழில் அலுவலர் 156 நபர்கள், இளநிலை உதவியாளர் 55 நபர்கள், தட்டச்சர் 32 நபர்கள் மற்றும் கருணை அடிப்படையில் உதவி வரைவாளர் 11 நபர்கள், இளநிலை உதவியாளர் 17 நபர்கள், பதிவுறு எழுத்தர் 8 நபர்கள், அலுவலக உதவியாளர் 3 நபர்கள் என மொத்தம் 799 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ. வேலு, வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம். ஆர்.கே.பன்னீர்செல்வம், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பொதுப்பணித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, பொதுப்பணித் துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் ச. மணிவண்ணன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### திருவண்ணாமலை, சட்டமன்ற உறுப்பினர் எ.வ.வேலுவின் இலவச பயிற்சி மையத்தில்

# தையற் பயிற்சி முடித்த பெண்களுக்கு சான்றிதழ்!

## பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு வழங்கி சிறப்புரையாற்றுகிறார்!

திருவண்ணாமலை, ஆக. 20–

திருவண்ணாமலை சட்டமன்ற உறுப்பினர், எ.வ.வேலுவின் இலவச தையற் பயிற்சி மையத்தில், பயிற்சி முடித்த பெண்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. நிகழ்சியில் கலந்து கொண்டு பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் சான்றிதழ்கள் வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

திருவண்ணாமலை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எ.வ.வேலு அவர்களின், சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம், முத்துவிநாயகர் கோவில் தெருவில் உள்ளது. இங்கு பள்ளி கல்லூரி மாணவர்களுக்கும், பொது மக்களுக்கும், இலவச ஜெராக்ஸ் எடுத்து கொடுக்கப்படுகிறது. மேலும், அங்கு 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நூல்கள் அடங்கிய நூலகம் உள்ளது. அங்கு தனியாக தினசரி மற்றும் வார இதழ்கள் பொதுமக்கள் வாசிக்க தனி அரங்கம் உள்ளது. மேலும், இங்கு மாணவர்களுக்கு இணையதளத்தில் தேவையானவற்றை நகல் எடுத்து தரப்படுகிறது. பொது மக்கள் வழங்கும் மனுக்களை அமைச்சர் அவர்களிடம் வழங்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திருவண்ணாமலை பெரிய தெருவில், தளபதி கணினி மையம் கடந்த 2018ஆம் ஆண்டு முதல் தளபதி கணினி மையம் தொடங்கப்பட்டு மாணவர்களுக்கு இலவச கணினி பயிற்சி அளிக்கப்படுகிறது.

அதேபோல், திருவண்ணாமலை பெரிய தெருவில், சட்டமன்ற உறுப்பினர் எ.வ.வேலு அவர்களின் இலவச தையற் பயிற்சி மையம் 2015 முதல் நடைபெற்று வருகிறது. ஒரு நாளைக்கு காலையில் இரண்டு பிரிவு, பிற்பகல் இரண்டு பிரிவு என தையற் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒரு பிரிவிற்கு 130 மகளிர் என, ஒரு நாளைக்கு 520 மகளிருக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒரு முதல்வர் 3 ஆசிரியர்கள் தையற் பயிற்சி அளிக்கின்றனர். அதனை தொடர்ந்து.

21.08.2025 வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு, திருவண்ணாமலை தண்டராம்பட்டு ரோடு, மாதவி பன்னீர்செல்வம் திருமண மண்டபத்தில், தையற் பயிற்சி முடித்த மகளிர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

நிகழ்ச்சிக்கு சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி தலைமை வகிக்கிறார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சி.என். அண்ணாதுரை, முன்னாள் நகர மன்ற தலைவர் இரா.ஸ்ரீதரன், எஸ். பன்னீர்செல்வம், ப.கார்த்திவேல் மாறன், ப்ரியா விஜயரங்கன், மாநகர மேயர் நிர்மலா வேல்மாறன், மெய்யூர் சந்திரன், த.ரமணன், பெ.கோவிந்தன், துணை மேயர் சு.ராஜாங்கம் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

தூய்மை அருணை மேற்பார்வையாளர் டாக்டர் எ.வ.வே.கம்பன் அனைவரையும் வரவேற்று பேசுகிறார்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ.வேலு சான்றிதழ்கள் வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

நிகழ்ச்சியில் அருணகிரி நாதர் விழா குழு தலைவர் வ.தனுசு, கெங்குசாமி நாயுடு மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி தலைவர் மாதவ.சின்ராஜ் ஆகியோர் வாழ்த்தி பேசுகின்றனர்.

நிறைவாக தையற் பயிற்சி முதல்வர் நிர்மலாகுமார் நன்றி கூறுகிறார்.



‘திராவிட மாடல்’ முதலமைச்சர் கழகத் தலைவர், தளபதியார் அவர்களின் தலைமையை ஏற்றும் சிறப்பான நிர்வாக திறமையை கருத்தில் கொண்டும் தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் முன்னிலையில் செங்கோட்டை நகர முன்னாள் அ.தி.மு.க. ஜெ.பேரவை செயலாளரும் முன்னாள் கவுன்சிலருமான சுந்தரம் அக்கட்சியிலிருந்து விலகி கழகத்தில் தன்னை இணைத்து கொண்டார். நிகழ்வில் செங்கோட்டை நகரச் செயலாளர் ஆ.வெங்கடேசன், நகர அவைத்தலைவர் காளி, மாவட்டப் பிரதிநிதி சுப்பிரமணியன், அணி அமைப்பாளர் கருப்பண்ணன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் நடைபெற்ற அவசர செயற்குழுக் கூட்டத்தில் சமூக நலத்துறை மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பெ.கீதா ஜீவன் பங்கேற்று உரையாற்றினார். உடன் மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, மாநில இளைஞரணி இன்பா ஏ.என்.ரகு, மாநில நெசவாளர் அணி வசந்தம் ஜெயக்குமார், மாநகரச் செயலாளர் ஆனந்த சேகரன், ஒன்றியச் செயலாளர்கள் கருணாநிதி, காசி விஸ்வநாதன், செல்வராஜ், புதூர் ராதாகிருஷ்ணன், அன்புராஜ், சின்ன மாரிமுத்து, மும்மூர்த்தி, சுரேஷ் முருகேசன், ராதா கிருஷ்ணன், பொதுக் குழு உறுப்பினர் ரமேஷ், நகர் மன்ற உறுப்பினர் கு.தவமணி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### வேளாண்மை – உழவர் நலத்துறை சார்பில்

# 169 நபர்களுக்கும், 33 வாரிசுதாரர்களுக்கும் பணி நியமன ஆணை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, ஆக. 20-

வேளாண்மை - உழவர் நலத் துறை சார்பில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக 169 நபர்களுக்கும், கருணை அடிப்படையில் 33 வாரிசுதாரர்களுக்கும் பணி நியமன ஆணைகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.8.2025) தலைமைச் செயலகத்தில், வேளாண்மை - உழவர் நலத்துறை சார்பில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக வேளாண்மை அலுவலர், உதவி வேளாண்மை அலுவலர் ஆகிய பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட 169 நபர்களுக்கும், கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர், ஆய்வக உதவியாளர், தட்டச்சர், காவலர் ஆகிய பணியிடங்களுக்கு 33 வாரிசுதாரர்களுக்கும் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

வேளாண்மைத்துறைக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்திடும் வகையில் தமிழ்நாட்டின் வரலாற்றில் வேளாண்மைத் துறைக்கென 5 தனி நிதிநிலை அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டதோடு, வேளாண்மைத்துறை என்ற பெயரினை வேளாண்மை - உழவர் நலத்துறை எனப் பெயர் மாற்றம் செய்து, வேளாண் பெருங்குடி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திடவும், உழவர்களின் நலன் காக்கவும், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம், 2 இலட்சம் விவசாயிகளுக்கு இலவச விவசாய மின் இணைப்புகள், இயற்கை வேளாண்மையை ஊக்குவித்திட முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம், விவசாயிகள் தங்கள் விளை நிலங்களின் மண்வளத்தினை அறிந்திட தமிழ் மண் வளம் இணையதளம், வேளாண்மை இயந்திரமயமாக்குதல் திட்டம், உழவர் பெருமக்களுக்கு வேளாண் உபகரண தொகுப்புகள் வழங்கும் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த வேளாண்மை - உழவர் நலத்துறையின் பணிகள் தொய்வின்றி நடைபெற அவ்வப்போது ஏற்படும் காலிப் பணியிடங்கள் உடனுக்குடன் நிரப்பப்பட்டு வருகிறது. இவ்வரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுநாள்வரை வேளாண்மை - உழவர் நலத்துறையில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் வாயிலாக பல்வேறு வகையான தொழில்நுட்ப மற்றும் அமைச்சுப் பணிகளுக்கு தெரிவு செய்யப்பட்ட 1982 நபர்களுக்கும், பணிக் காலத்தில் இயற்கை எய்திய பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் 266 நபர்களுக்கும், என மொத்தம் 2248 நபர்களுக்கு பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

அதன் தொடர்ச்சியாக, தற்போது தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 60 வேளாண்மை அலுவலர்கள் மற்றும் 109 உதவி வேளாண்மை அலுவலர்கள் பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கும், வேளாண்மைஉழவர் நலத்துறையில் பணிபுரிந்து பணிக்காலத்தில் இயற்கை எய்திய பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு இளநிலை உதவியாளர் (பிணையம்/பிணையமற்றது), ஆய்வக உதவியாளர், தட்டச்சர் மற்றும் காவலர் ஆகிய பணியிடங்களுக்கு 33 வாரிசுதாரர்களுக்கும், என மொத்தம் 202 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 10 நபர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் வ.தட்சிணாமூர்த்தி, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை ஆணையர் த.ஆபிரகாம், வேளாண்மை இயக்குநர் பா.முருகேஷ், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பெ.குமாரவேல்பாண்டியன், வேளாண்மைப் பொறியியல் துறை தலைமைப் பொறியாளர் இரா.முருகேசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



வேலூர் மாநகராட்சி மண்டலம் 3 வேலப்பாடியில் நடந்த ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாமில் மாநகரச் செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சியர் வே.இரா. சுப்புலட்சுமி ஆகியோர் மாற்றுத் திறனாளி ஒருவருக்கு அடையாள அட்டையை வழங்கினார்கள். நிகழ்ச்சியில் மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், மண்டலக் குழு தலைவர் யூசுப் கான் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் – கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க ‘உங்களுடன் ஸ்டாலின்’ முகாம் தென்காசி தெற்கு மாவட்டம் தென்காசி கிழக்கு ஒன்றியம் குற்றாலம்பேரூர் பகுதியில் தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் துவக்கி வைத்தார். நிகழ்வில் தென்மண்டல தகவல் தொழில்நுட்ப அணி பார்வையாளர் நவீன், ஒன்றியச் செயலாளர் அழகு சுந்தரம்,பேரூர் செயலாளர் குட்டி என்ற சங்கர், இளைஞரணி அமைப்பாளர் கிருஷ்ணராஜா தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் அழகு தமிழ் சங்கர், துணை அமைப்பாளர் சபீக் அலி, ஒன்றிய துணைச் செயலாளர் ஆனந்த்,பேரூர் துணைச் செயலாளர் மாரியப்பன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் கொக்கி குமார், வார்டு செயலாளர் சுரேஷ், குத்தாலிங்கம், பால்ராஜ், முத்துக்குமார், நாராயணன், ராமர், சுந்தர்ராஜ், சதீஷ், நெல்லை முத்துமாரி உள்பட கழகத்தினர் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.